Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 16 (01-09-1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 195

## நீக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் விபரம் மீள் பரிசீலனை

(நல்லூர்)

தொண்டர் ஆசிரியர்சேவையிலிருந்து நீக்கப்பட்டவர்களின் நிலையை மீள் பரிசோதனை செய்வதற்காக அவர்களின் விபரங்களை வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார். 31-12-89இல் குறைந்தது ஒரு வருடச் சேவையைப் பூர்த்திசெய்யாததன் காரணத்தினால் நிரந்தர நியமனத்திற்குத் தகுதியற்றவர்கள் என்று நிறுத்தி வைக்கப்பட்டவர்களின் முன்னைய பாடசாலை, முதல் நியமனக் கடித இலக்கமும் திகதியும் மற்றும் பிறந்த திகதி ஆகியவற்றை உடனடியாக அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்வி (4 ஆம் பக்கம் பார்க்க)

### ★ தென்னிலங்கை அரசியல் நெருக்கடி

# இனப்பிரச்சினையில் கொள்கை மாற்றம் எதையும் ஏற்படுத்தி விடப் போவதில்லை

## பத்திரிகையாளர் மத்தியில் தலைவர் வே. பிரபாகரன்

(கொழும்பு)

''சிறிலங்காவில் ஏற்படும் அரசியல் மாற்றங்களின் விளைவுகளைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆயினும் கொழும்பில் ஏற்படும் அரசியல் நெருக்கடிகளால் இனப்பிரச்சினையில் சிறிலங்கா அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கமுடியாது. தற்பொழுது அரசிற்கு எதிராகக் குரல் எழுப்பும் லலித் அத்துலத்முதலி முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் எனப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகையினால் தெற்கை யார் ஆளுகின்றனர் என்பதல்ல பிரச்சினை'' என தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் பத்திரிகையாளருக்கு யாழ்ப்பாணத்தில் அவர் வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். நேற்று அவர் வழங்கிய பேட்டியின் முழு விபரமும் வருமாறு:

★ கேள்வி : கடந்தஒரு வருடகாலமாக நடந்து வரும் போரின் பெறுபேறுகள் சம்பந்தமாக என்ன சொல்ல விழைகிறீர்கள்?

பதில் : பெறுபேறு சம்பந்தமாககூறுவதானால் தற்போது கூடிய பிரதேசம் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது என நம்புகிறேன் போர் தொடங்கும்போது இருந்த பல சிறிலங்கா இராணுவ முகாம்கள் தற்போது இல்லை கொக்காவில், மாங்குளம் போன்ற வன்னிப்பிரதேசத்தின் பெரும் பகுதி வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. கோட்டைமுகாம் அழிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியும் விடுவிக்கப்பட்டது அதாவது கரந்தடிப்படையாக இருந்த நாம் தற்போது பெரிய அளவில் இராணுவத்தை எதிர்த்து அழிக்கும் நிலையில் இருக்கிறோம்.

★ கேள்வி : ஆனையிறவுப் போர் பற்றி...

பதில் : மரபுரீதியான இராணுவ அணியாக எதிரிகளுடன் நேரடியாக மோதி அழிக்கும் நிலையின் முதற்படி இது எனலாம். பெரிய அளவில் இறங்கிய இராணுவத்தை நீண்ட நாட்கள் தடுத்துள்ளோம் இராணுவ ரீதியில் ... எடுத்துக்காட்டுகிறது.

★ கேள்வி : ஆனையிறவுப் போரில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?



பதில் : இழப்புகளுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது இழப்புகளை வளர்ச்சியின் உந்துகோலாகக் கருத வேண்டும். இத்தகைய இழப்புகள் பொதுமக்களினதும் போராளிகளினதும் மனவுறுதியை வளர்க்கக் கூடியவை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### விக்ரர், சிறீதரன், ரஞ்சிதன்

மணலாறு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் விக்ரர் (குமாரரட்ணம் சுபாஸ்கரன், பொலிஸ்வீதி வெல்லாவெளி மட்டக்களப்பு) சிறீதரன் (சூசைப்பிள்ளை நிக்லஸ் இருதயபுரம் மூதூர்) ஆகியோர் வீரமரணம் அடைந்தனர்.

மாவடி ஓடையில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ரஞ்சிதன் (இளையதம்பி - கந்தசாமி - விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை) என்பவர் வீரமரணமடைந்தார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளு

## அமைச்சர்களின் இராஜினாமா ஏற்பு

அமைச்சரவையிலிருந்து விலகுவதாக எழுத்து மூலம் அறிவித்த மூன்று அமைச்சர்களின் இராஜினாமாவையும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

முன்னதாக இராஜினாமாவை சமர்ப்பித்த லலித் அத்துலத்முதலி மற்றும் ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோரைத் தொடர்ந்து தொழில் துறை இணை அமைச்சர் லக்ஷ்மன் செனிவிரெட்னாவும் தமது இராஜினாமாக் கடிதத்தை நேற்றுச் சமர்ப்பித்தார்.

## அரசாங்கம் கவிழ்வது உறுதி; எதிர்க்கட்சிகள் நம்பிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிரானகுற்றச்சாட்டு அடங்கிய தீர்மானம் தோல்வி கண்டாலும் கூட நாட்டில் அவசரகாலச் சட்டம் தொடரத் தாம் வாக்களிக்கப்போவதில்லை என எதிர்க்கட்சிகள் கொழும்பில் தெரிவித்துள்ளன.

எனவே ஜனாதிபதி பதவி தப்பிப் பிழைத்தாலும் அரசாங்கம் கவிழ்வது உறுதியென எதிர்க் கட்சிகள் கூறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர்கள் உடன் திரும்புமாறு அழைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த அமைச்சர்கள் அவசரமாக நாடு திரும்புமாறு அழைக்கப்பட்டுள்ளனர். இதனால் சீனாவிற்குச் சென்றிருந்த அமைச்சர் சிறிசேன குரேயும், வியாவுக்குச் சென்றிருந்த அமைச்சர் ஏ. ஆர். மன்சூரும் நேற்று நாடு திரும்பினர்.

## கூட்டத்தொடர் பிற்போட்டது சட்டவிரோதமான செயல்

(கொழும்பு)

பாராளுமன்றக் கூட்டத் தொடர் பின்போடப்பட்ட செயல் சட்டவிரோதமானது ணானது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிராகக் குற்ற மனு ஒன்றைக் ... குற்றம் சாட்டினர்.

கொழும்பில் கூட்டாகச் செய்தியாளர் மாநாட்டை ...

# எதையும் ஏற்படுத்த விடப் போவதில்லை

மச்சந்திரா ஆகியோரைத் தொடர்ந்து தொழில் துறை இணை அமைச்சர் லக்ஷ்மன் செனிவ்ரெட்னாவும் தமது இராஜினாமாக் கடிதத்தை நேற்றுச் சமர்ப்பித்தார்.

## பத்திரிகையாளர் மத்தியில் தலைவர் வே. பிரபாகரன்

(கொழும்பு)

"சிறிலங்காவில் ஏற்படும் அரசியல் மாற்றங்களின் விளைவுகளைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆயினும் கொழும்பில் ஏற்படும் அரசியல் நெருக்கடிகளால் இனப்பிரச்சினையில் சிறிலங்கா அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கமுடியாது. தற்பொழுது அரசிற்கு எதிராகக் குரல் எழுப்பும் லலித் அத்துலத்முதலி முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் எனப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகையினால் தெற்கை யார் ஆளுகின்றனர் என்பதல்ல பிரச்சினை" என தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் பத்திரிகையாளருக்கு யாழ்ப்பாணத்தில் அவர் வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். நேற்று அவர் வழங்கிய பேட்டியின் முழு விபரமும் வருமாறு:

★ கேள்வி : கடந்தஒரு வருடகாலமாக நடந்து வரும் போரின் பெறுபேறுகள் சம்பந்தமாக என்ன சொல்ல விழைகிறீர்கள்?

பதில் : பெறுபேறு சம்பந்தமாககூறுவதானால் தற்போது கூடிய பிரதேசம் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது என நம்புகிறேன் போர் தொடங்கும்போது இருந்த பல சிறிலங்கா இராணுவ முகாம்கள் தற்போது இல்லை கொக்காவில், மாங்குளம் போன்ற இடங்களில் இருந்த இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டதால் வன்னிப்பிரதேசத்தின் பெரும் பகுதி வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. கோட்டைமுகாம் அழிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியும் விடுவிக்கப்பட்டது அதாவது கரந்தடிப்படையாக இருந்த நாம் தற்போது பெரிய அளவில் இராணுவத்தை எதிர்த்து அழிக்கும் நிலையில் இருக்கிறோம்.

★ கேள்வி : ஆனையிறவுப் போர் பற்றி...

பதில் : மரபுரீதியான இராணுவ அணியாக எதிரிகளுடன் நேரடியாக மோதி அழிக்கும் நிலையின் முதற்படி இது எனலாம். பெரிய அளவில் இறங்கிய இராணுவத்தை நீண்ட நாட்கள் தடுத்துள்ளோம் இராணுவ ரீதியில் பெருமளவில் முன்னேறி இருக்கிறோம் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.



★ கேள்வி : ஆனையிறவுப் போரில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

பதில் : இழப்புகளுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது இழப்புகளை வளர்ச்சியின் உந்துகோலாகக் கருத வேண்டும். இத்தகைய இழப்புகள் பொது மக்களினதும் போராளிகளினதும் மனவுறுதியை வளர்க்கக் கூடியவை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### விக்ரர், சிறீதரன், ரஞ்சிதன்

மணலாறு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் விக்ரர் (குமாரரட்ணம் சுபாஸ்கரன், பொலிஸ்வீதி வெல்லாவெளி மட்டக்களப்பு) சிறீதரன் (சூசைப்பிள்ளை நிக்லஸ் இருதயபுரம் மூதூர்) ஆகியோர் வீரமரணம் அடைந்தனர்.

மாவடி ஓடையில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ரஞ்சிதன் (இளையதம்பி - கந்தசாமி - விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை) என்பவர் வீரமரணமடைந்தார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

## அரசாங்கம் கவிழ்வது உறுதி; எதிர்க்கட்சிகள் நம்பிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிரானகுற்றச்சாட்டு அடங்கிய தீர்மானம் தோல்வி கண்டாலும் கூட நாட்டில் அவசரகாலச் சட்டம் தொடரத் தாம் வாக்களிக்கப்போவதில்லை என எதிர்க்கட்சிகள் கொழும்பில் தெரிவித்துள்ளன.

எனவே ஜனாதிபதி பதவி தப்பிப் பிழைத்தாலும் அரசாங்கம் கவிழ்வது உறுதியென எதிர்க் கட்சிகள் கூறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர்கள் உடன் திரும்புமாறு அழைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த அமைச்சர்கள் அவசரமாக நாடு திரும்புமாறு அழைக்கப்பட்டுள்ளனர். இதனால் சீனாவிற்குச் சென்றிருந்த அமைச்சர் சிறிசேனகுரேயும், வியாவுக்குச் சென்றிருந்த அமைச்சர் ஏ. ஆர். மன்சூரும் நேற்று நாடு திரும்பினர்.

## கூட்டத்தொடர் பிற்போட்டது சட்டவிரோதமான செயல்

(கொழும்பு)

பாராளுமன்றக் கூட்டத்தொடர் பின்போடப்பட்ட செயல் சட்டவிரோதமானது அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிராகக் குற்ற மனு ஒன்றைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பதவி விலகிய மூன்று அமைச்சர்களும் குற்றம் சாட்டினர்.

கொழும்பில் கூட்டாகச் செய்தியாளர் மாநாட்டை நடத்திய பதவி விலகிய மூன்று அமைச்சர்கள் அரசு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை இழந்துவிட்டது என்பதைத் தான் பாராளுமன்றக் கூட்டத் தொடரைப் பிற்போட்ட ஜனாதிபதியின் செயல் புலப்படுத்துகிறது என்றனர்.

## அலரி மாளிகையில் அவசரக் கூட்டத்தை டி.பி.விஜயதுங்காகூட்டினார்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிராகக் குற்ற விசாரணை நடத்தக் கோரிக்கைச்சாத்திட்டதாகக் கருதப்படும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுமுகமாகவும் ஐ.தே.க. எம்பிகளின் கட்டுக்கோப்பை உறுதிப்படுத்தவும் நேற்று முன்தினம் பிரதமர் டி.பி. விஜயதுங்கா அலரி மாளிகையில் அவசரமாநாடு ஒன்றை நடத்தினார்.

வெளி மாவட்டங்களுக்குச் சென்றிருந்த ஆளுங்கட்சி எம். பிக்களும் அவசரமாகக் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

ஆளும் கட்சி எம். பீக்களில் சிலரைத் தவிர பெரும்பாலானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் எனத் தெரிய வருகிறது. அமைச்சர்கள் சிலர் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லையாம்.

ஜனாதிபதிக்கு ஆதரவுதேடி கையெழுத்து வாங்கப்பட்டதாகவும், ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கப்பட வேண்டியதின் அவசியம் கூட்டத்தில் வற்புறுத்தப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

## தற்கொலை,

கொடிகாமம் இராமாவில் என்னும் இடத்தில் - கடந்த 15 ஆம் திகதி இளைஞர் ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டுள்ளார். (86)

# நாட்டில் வன்முறைச்செயல்களை பிரேமதாசா தூண்டுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நாட்டில் வன்முறைச் செயல்களைத் தூண்டிவிட முயற்சிப்பதாக பதவி விலகிய அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றச் சபா நாயகர் எச். முகமெட்டை இரு வாகனங்களை வைத்துக் கொலை செய்ய எத்தனித்ததாகவும், தங்களுக்குள்ள பாதுகாப்பு வசதிகள் உடனடியாக விலக்கிக்கொள்ளப்பட்டதும் இதனையே காட்டுகிறதென்று அத்துலத்முதலி மேலும் தெரிவித்தார்.

பிரேமதாஸா நான்கு குண்டர் படைகளை அமைத்துள்ளதாகவும், குண்டர் படைகள் விசேடமாக ஆளும் கட்சியில் இருந்து பிரிந்த 45 பாராளுமன்ற அங்கத்தவர்களையும் கவனிப்பதற்கென்றே நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அத்துலத் முதலி பி.பி.ஸிக்கு வழங்கிய தொலைபேசிப் பேட்டியில் கூறினார். அதில் அவர் இந்தக் குண்டர் படைகளில் சீருடை தரித்தவர்களும் உள்ளனர் என்றும் கூறினார்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் தொலைபேசிப் பேச்சுக்கள் ஒற்றுக் கேட்கப்படுகின்றன என்றும் அத்துலத்முதலி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவினால் உரையாடல்கள் ஒற்றுக்கேட்கப்படுகின்றன என்றும், இதற்காக அவர் பிரான்சில் தயாரிக்கப்பட்ட நவீன கருவி ஒன்றை வைத்திருக்கிறார் என்றும், இது ஒரே தடவையில் 680 தொலைபேசிகளை ஒற்றுக் கேட்க உதவும் என்றும் லலித் அத்துலத்முதலி கூறினார்.

## சுவரொட்டிப் போர்

கொழும்பில் ஆளும் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அது பெரும் சுவரொட்டிப்போராக வெடித்திருப்பதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரின் மதில்கள் சுவர்கள் எங்கும் இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் சாடி சுவரொட்டி வாசகங்களை ஒட்டி வருவதாகவும் கார்ட்டூன்கள் விளக்கப்படங்கள் என்பவற்றை வரைந்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதனால் கொழும்பு நகர் எங்கும் சுவரொட்டிமயமாக காட்சி அளிப்பதாகவும் இந்த சுவரொட்டிப் போர் மற்றும் நகரங்களுக்கும் பரவி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## ஸ்ரான்லி திலகரெட்னா நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்னாள் சபாநாயகர் ஸ்ரான்லி திலகரெட்னாவைக் கட்சியில் இருந்து நீக்கியிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவித்திருப்பதாக நேற்றைய தினகரன் செய்தி வெளியிட்டுள்ளது.

## ஆசியும் ஒத்துழைப்பும்பெற பிரேமா தீவிர முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி விகாரைகள், ஆலயங்கள் செல்வதோடு பலஉயர்மதகுருமாரையும் சந்தித்து ஆசிபெறும் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகிறார்

இதைவிட தனிச்சங்கங்கள், மாநகர நகர பிரதேசசபைகள் என பல்வேறு இடங்களில் இருந்து ஆதரவு தேடும் முயற்சிகளும் மும்முரமாக இடம் பெற்று வருவதை சிறிலங்கா ரூபவாஹினி கூட்டுத்தாபன செய்திகளிலும் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனச் செய்திகளிலும் கடந்த இரண்டு நாட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 19 பேர் கைது

(சென்னை)

தராசு பத்திரிகை அலுவலகம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை பத்தொன்பது பேரைத் தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## 42-ம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம் 19 - 08 - 1972

வீர மரணம் 19 - 07 - 1991

### வீரவேங்கை கோபிகா

(பராசக்தி கந்தசாமி)

திதி 01.09.91

எம் மண்ணைக் காக்க தன்னுயிர் நீத்த பராசக்தியே! நீ எம் இனத்தின் விலங்கினை ஒடிக்க புயலாக எழுந்து புலியோடு சேர்ந்து போர்க்களம் புகுந்தாய். ஆனையிறவுப் போரிலே எதிரியை அழித்திட புலியெனப் பாய்ந்தாய். எதிரியின் குண்டை ஏந்தியே மடிந்தாய். உன் கனவு நனவாக இறை அருள் வேண்டி நிற்கும்.

தாய், சகோதரர்கள்,
மைத்துனர்மார்.

ஏழாலை மேற்கு
ஏழாலை

(B/3039)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை விஜயா

(ஜெயவதனி தம்பிப்பிள்ளை)
[அல்வாய் தெற்கு]

ஜனனம் 26-2-1969

வீரமரணம் 19 07-1991

(கட்டைக்காட்டில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார்).

இப்புவியில் நாமிருந்து ஏங்கிக் கண்ணீருகுத்து
முப்போதும் தவறாதுன் முழுநினைவாய் விழித்திருக்க
காற்றோடு காற்றாகக் கலந்திட்ட எங்கள் உயிரே
ஆற்றாத நினைவலையால் ஆன்மாவும் அமிழுதடி
ஆனாலும்
உன் உயர் கொள்கையின் விடிவிற்காய்
தலைவனின் வழிநின்று வீரமண்ணில்
வித்தானாய் என்பதனால் -
அடைகின்றோம் மன அமைதி
வேண்டுகிறோம் ஆத்மசாந்தி

''ஜெயவாசா'
அல்வாய் தெற்கு
அல்வாய்

அன்புள்ள அம்மா,
அன்புச்சகோதரிகள்

(R/1694)


வெளிநாட்டுத் தபால்களை
இன்றே ஒப்படைப்பீர்!
துரித தபால் சேவைக்கு DHL

DHL WORLDWIDE EXPRESS

C/o. Cosmos Marketing Services,
120 (200), K. K. S. ROAD
JAFFNA.

(B-3040)


## நினைவு கூருகின்றோம்...



1991 - 09 - 01

லெப். றஜீவன்

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் திக்கத்தில் சிறிலங்கா காவல்துறை அதிரடிப் பிரிவினரால் படுகொலை செய்யப்பட்ட 3 தமிழர்கள்

1987ஆம் ஆண்டு கன்னியா வெந்நீரூற்று அருகில் சிறிலங்காப் படையினரின் கண்ணி வெடியில் சிக்கியதில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1989ஆம் ஆண்டு குமுழமுனையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த

2ஆம் லெப். கலியுகன் (பொன்னுத்துரை தங்கராசா - தம்பலகாமம், திருக்கோணமலை)
2ஆம் லெப். வரோதயன் (குருநாயகம்பிள்ளை யோகேஸ்வரன் - கல்மடு)
2ஆம் லெப் லுக்மன் (இராமலிங்கம் ரவீந்திரன் - சின்னக்கரிசல்)
லெப். றஜீவன் (தங்கராசா சுதாகரன் - அச்சுவேலி வடக்கு)
திலகன் (காசிலிங்கம் பிரபாகரன் - திருநெல்வேலி)

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு படை முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமெய்திய

மேஜர் ரட்ணம் (சுப்பிரமணியம் யோகலிங்கம் - ஊரியான் முரசுமோட்டை)
லெப். கரன் (தெய்வேந்திரம் சதாசிவம் - 155 ஆம் கட்டை, விவேகானந்தநகர், கிளிநொச்சி)
லெப். அகிலன் (பொன்னுச்சாமி நற்குணேஸ்வரன் - உதயநகர் கிழக்கு கிளிநொச்சி)
மெண்டிஸ் (மகேஸ் ஜெயசீலன் - ரயில் நிலையவீதி, மன்னார்)
கபில்தேவ் (வைரமுத்து கலாநாதன் - முதலாம் குறிச்சி, பழுகாமம்)
சுந்தர் (சித்திரவேல், கஜேந்திரராசா - 5 ஆம் வட்டாரம், சம்பூர், திருக்கோணமலை)
ஆண்டவன் (செல்வராசா ஜெயபாஸ்கரன் - சுன்னாகம்)
நிக்கலஸ் (நாகராசா சங்கர் - முதலாம் வட்டாரம், ஆலங்கேணி, கிண்ணியா)
நிக்கலஸ் (கனகரட்ணம் விஜயன் - ஏறாவூர்)
நிக்கலஸ் (சிவஞானம் சுரேஸ்குமார் - இரத்தினபுரம், கிளிநொச்சி)
ரஜனி (முத்துவேல் சவுந்தரராஜன் - 6 ஆம் வட்டாரம், சேனையூர், மூதூர்)
குழந்தை (யோண்ரட்ணம், அல்பிரட் பாலசிங்கம் - மயிலங்கூடல் இளவாலை)
ஜலீம் (முகம்மது இஸ்மாயில் மன்சூர் - இல 20, ஏறாவூர்)
கலீல் (முகம்மது காசிம்பாதூர் - 49 காதர்வீதி, ஏறாவூர்)
றணிஸ் (சிவயோகநாதன் சசிதரன் - இல 5, சசிதரன் வீதி, கல்வியங்காடு)

## யாழ். செஞ்சிலுவைச்சங்க கிளைக்கு ஒரு வருட காலமாக மருந்து விநியோகமில்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைக்கு அதன் தலைமை அலுவலகத்தில் இருந்து கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மருந்துப் பொருள்கள் எதுவும் கிடைக்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் முக்கிய அரச சார்பற்ற நிறுவனமாகிய இச்சங்கத்தின் மருத்துவசேவை இதனால் முற்றாக பாதிப்புறும் நிலையில் உள்ளது

மேற்படி காலப்பகுதியில் ''யுனிசெப்'' நிறுவனத்தின் உதவியுடன் கிடைத்த சுமார் 25 பெட்டி மருந்துப் பொருள்களைத் தவிர எந்த மருந்து வகையும் இதன் தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை. (க)

## கல்வி அதிகாரி கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சின் அழைப்பை ஏற்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கடந்த வியாழக்கிழமை


அரி-கோப் உள்ளூர் உணவகம்

கோலாகலத் திறப்பு விழா

காலம்: 01-09-91 ஞாயிறு நண்பகல் 12-00 மணி
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப.பொ) உயர்திரு. தி. சபாரட்ணம் அவர்களால் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படும்.

- எமது சேவையில் மேலும் ஓர் முன் முயற்சி!
- அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்.

மடிந்தாய். உன் கனவு நனவாக இறை அருள் வேண்டி நிற்கும்.

தாய், சகோதரர்கள்,
மைத்துனர்மார்.

ஏழாலை மேற்கு
ஏழாலை (B/3039)

வீரமரணம் அடைந்தார்).

இப்புவியில் நாமிருந்து ஏங்கிக் கண்ணீருகுத்து
முப்போதும் தவறாதுன் முழுநினைவாய் விழித்திருக்க
காற்றோடு காற்றாகக் கலந்திட்ட எங்கள் உயிரே
ஆற்றாத நினைவலையால் ஆன்மாவும் அமிழுதடி
ஆனாலும்
உன் உயர் கொள்கையின் விடிவிற்காய்
தலைவனின் வழிநின்று வீரமண்ணில்
வித்தானாய் என்பதனால் -
அடைகின்றோம் மன அமைதி
வேண்டுகிறோம் ஆத்மசாந்தி

''ஜெயவாசா'
அல்வாய் தெற்கு
அல்வாய்

அன்புள்ள அம்மா,
அன்புச்சகோதரிகள்

(R/1694)

## யாழ். செஞ்சிலுவைச்சங்க கிளைக்கு

# ஒரு வருட காலமாக மருந்து விநியோகமில்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைக்கு அதன் தலைமை அலுவலகத்தில் இருந்து கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மருந்துப் பொருள்கள் எதுவும் கிடைக்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் முக்கிய அரச சார்பற்ற நிறுவனமாகிய இச்சங்கத்தின் மருத்துவசேவை இதனால் முற்றாக பாதிப்புறும் நிலையில் உள்ளது

மேற்படி காலப்பகுதியில் ''யுனிசெப்'' நிறுவனத்தின் உதவியுடன் கிடைத்த சுமார் 25 பெட்டி மருந்துப் பொருள்களைத் தவிர எந்த மருந்து வகையும் இதன் தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை. (க)

## கல்வி அதிகாரி கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்

கல்வியமைச்சின் அழைப்பை ஏற்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கடந்த வியாழக்கிழமை கொழும்பு பயணமானார்.

கல்வியமைச்சின் செயலாளர் பரீட்சை ஆணையாளர் மற்றும் உயரதிகாரிகளுடன் அவர் இச்சந்திப்பின் போது பேச்சுவார்த்தை நடாத்துவார் என்றும். வடபகுதியில் நடாத்தப்படாத க.பொ.த. (உ/த) பரீட்சை, ஆங்கில ஆசிரியர் பரீட்சை, தாதியர் பரீட்சை போன்ற பரீட்சைகள் குறித்தே முக்கியமாக ஆராயப்படும் என்றும் யாழ். கல்வித்திணைக்களம் - தெரிவித்துள்ளது.

## விடுவிக்கவும்

கோமாரியைச்சேர்ந்த மெதடிஸ்ட் போதகரான ஜெயவர்த்தன ஹீன் நிலமே சந்திரசேகரம் என்பவரை விடுதலை செய்யும்படி கோரி அவரது மனைவியார் சிறிலங்கா நீதித்துறையிடம் கேட்டுக் கொண்டுள்ளார்,

சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட 51 வயதுடைய இந்தப் போதகர் பொய்க்குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதுசெய்யப்பட்டவர் என்றும் மனைவியார் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.


## அரி-கோப் உள்ளூர் உணவகம்

# கோலாகலத் திறப்பு விழா

காலம்: 01-09-91 ஞாயிறு நண்பகல் 12-00 மணி
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப.பொ) உயர்திரு. தி. சபாரட்ணம் அவர்களால் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படும்.



- எமது சேவையில் மேலும் ஓர் முன் முயற்சி!
- அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், ஜோ. எகட்டனின் அனுசரணையுடனான சேவையில் உள்ளூர் மூலவளங்களைக் கொண்ட

## உள்ளூர் உணவு விநியோக சாலை



- அறுசுவை உணவு வகைகளுடன், சிற்றுண்டி உணவு வகைகளும் அடங்கிய 24 மணி நேர (இரவு பகல்) சேவை
- விஷேடமாக வார இறுதி நாட்களில் ஒடியல் சேர்க்கையுடனான மாமிச, மரக்கறிக் கூழ்
- விஷேட வைபவ தேவைகளுக்கான முன் கூட்டிய பலரக உணவுத் தேவைகளுக்கான பதிவுகளும் ஏற்கப்படும்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், சக கூட்டுறவுச் சங்கங்கள், திணைக்களங்களின் ஆதரவினை நாடி நிற்கின்றோம்.

'அரிகோப் உள்ளூர் உணவகம்'
19/3 கொழும்புத்துறை சாலை,
சுண்டிக்குளி.

- நிர்வாகிகள்
அரியாலை தெ.ப பொ.உ.வி.கூ. சங்கம்
(B-3034)


1984ஆம் ஆண்டு இதேதினத்தில் திக்கத்தில் சிறிலங்கா காவல்துறை அதிரடிப் பிரிவினரால் படுகொலை செய்யப்பட்ட 3 தமிழர்கள்

1987ஆம் ஆண்டு கன்னியா வெந்நீரூற்று அருகில் சிறிலங்காப் படையினரின் கண்ணி வெடியில் சிக்கியதில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1989ஆம் ஆண்டு குமுழமுனையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த

2ஆம் லெப். கலியுகன் (பொன்னுத்துரை தங்கராசா - தம்பலகாமம், திருக்கோணமலை)
2ஆம் லெப். வரோதயன் (குருநாயகம்பிள்ளை யோகேஸ்வரன் - கல்மடு)
2ஆம் லெப் லுக்மன் (இராமலிங்கம் ரவீந்திரன் - சின்னக்கரிசல்)
லெப். றஜீவன் (தங்கராசா சுதாகரன் - அச்சுவேலி வடக்கு)
திலகன் (காசிலிங்கம் பிரபாகரன் - திருநெல்வேலி)

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு படை முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமெய்திய

மேஜர் ரட்ணம் (சுப்பிரமணியம் யோகலிங்கம் - ஊரியான் முரசுமோட்டை)
லெப். கரன் (தெய்வேந்திரம் சதாசிவம் - 155 ஆம் கட்டை, விவேகானந்தநகர், கிளிநொச்சி)
லெப். அகிலன் (பொன்னுச்சாமி நற்குணேஸ்வரன் - உதயநகர் கிழக்கு கிளிநொச்சி)
மெண்டிஸ் (மகேஸ் ஜெயசீலன் - ரயில் நிலையவீதி, மன்னார்)
கபில்தேவ் (வைரமுத்து கலாநாதன் - முதலாம் குறிச்சி, பழுகாமம்)
சுந்தர் (சித்திரவேல், கஜேந்திரராசா - 5 ஆம் வட்டாரம், சம்பூர், திருக்கோணமலை)
ஆண்டவன் (செல்வராசா ஜெயபாஸ்கரன் - சுன்னாகம்)
நிக்கலஸ் (நாகராசா சங்கர் - முதலாம் வட்டாரம், ஆலங்கேணி, கிண்ணியா)
நிக்கலஸ் (கனகரட்ணம் விஜயன் - ஏறாவூர்)
நிக்கலஸ் (சிவஞானம் சுரேஸ்குமார் - இரத்தினபுரம், கிளிநொச்சி)
ரஜனி (முத்துவேல் சவுந்தரராஜன் - 6 ஆம் வட்டாரம், சேனையூர், மூதூர்)
குழந்தை (யோண்ரட்ணம், அல்பிரட் பாலசிங்கம் - மயிலங்கூடல் இளவாலை)
ஜலீம் (முகம்மது இஸ்மாயில் மன்சூர் - இல 20, ஏறாவூர்)
கலீல் (முகம்மது காசிம்பாதுர் - 49 காதர்வீதி, ஏறாவூர்)
றணிஸ் (சிவயோகநாதன் சசிதரன் - இல 5, சசிதரன் வீதி, கல்வியங்காடு)
மூர்த்தி (தம்பிரர்சா அனிதராசா - பருத்தித்துறை)
சர்வேஸ் (லட்சுமணன் முருகன் - 261, கரும்புள்ளியான், வவுனிக்குளம்)
லிங்கேஸ் (வெள்ளைத்தம்பி சதீஸ்குமார் - 6 ஆம் வட்டாரம், சாம்பல்தீவு)
அனங்கன்/சிங்கன் (கந்தையா சிங்கராசா - 12, D - யோகபுரம், மல்லாவி)
வித்தி (விஜயகுமார் - கிராஞ்சி, பூநகரி)
ரவி (உடையார்கட்டு)
மன்மதன் (வவுனியா)
சுகுமார் (வீரன் அருணதேவன் - கல்மடு, வவுனியா)
அமலன் (சிவலிங்கம் சரத்சந்திரன் - குமுழமுனை, முள்ளியவளை)
சிறி (செல்வநாயகம் புனிதராசா - ஆசிரேஸ் சதுக்கம், ஒசில், திருக்கோணமலை)
பிறேமசிறி (சதாசிவம் கோணேஸ்வரன் - நெடுங்கேணி)
நேசன் (பொன்னன் கனகரத்தினம் - 12 ஆம் கட்டை, விசுவமடு)
சிவராஜ் (சின்னத்துரை சிவகுமார் - உமாவில் வீதி, கொம்மாந்துறை)
அசோக் (பாலச்சந்திரன் நதீந்திரன் - அளவெட்டி தெற்கு)

அல்வைக் கந்தளாயின் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

கப்டன் பேணாட் (காளிக்குட்டி தங்கராசா - புதுக்குடியிருப்பு, தம்பலகாமம்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3035)

ஸ்ரீ சிந்தனைக்கு ஸ்ரீ

ஜனநாயகம் என்பது தலைகளை எண்ணுவதோ, அல்லது தலைகளை உடைப்பதோ அல்ல.
—வாரான் ஜாஸ்ரிங்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 01-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த பெ எண் 65

# பாராளும. காலநீடிப்பு பேரத்திற்கான ஒதுக்கீடு

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைப் பதவி விலகக் கோரும் பிரேரணை பாராளுமன்றச் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டமையும், அதில் ஐ. தே. கட்சிஉறுப்பினர்கள் சுமார் 45 பேர் கையொப்பம் இட்டுள்ளமையும், அமைச்சர்கள் சிலர் பதவி விலகியமையையும் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சிறிலங்கா ஜனாதிபதி தமக்குள்ள விசேட அதிகாரத்தைக் கொண்டு பாராளுமன்றத்தை சுமார் ஒருமாதம் அளவில் ஒத்திவைத்துள்ளார்.

இக்காலத்தில் கட்சிக்குள் தமக்குள்ள ஆதரவைக் கணிப்பிடவும், அதிருப்தியாளர்களுடன் பேரங்களில் ஈடுபடவும், தீவிர முரண்பாடு உள்ளவர்களை வெளியேற்றவும் சிறிலங்கா ஜனாதிபதியும் அவரின் ஆதரவாளர்களும் முனைவார்கள். அதற்கான முன் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக சிறிலங்கா பிரதமர் டி.பி. விஜயதுங்கா ஆளும் கட்சி உறுப்பினர்களை அழைத்து விசேட கூட்டம் ஒன்றை தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடத்தியுள்ளார். வெளிநாடுகளிலும், வெளி மாவட்டங்களிலும் உள்ள ஐ. தே. கட்சி உறுப்பினர்களுக்கு உடன் கொழும்பு திரும்புமாறு அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன ஜனாதிபதிக்கு ஆதரவாக கையெழுத்து வேட்டையும் ஆரம்பமாகியுள்ளது. அத்தோடு இக் கூட்டத்தில் ஐந்து அமைச்சர்கள், ஏழு இராஜாங்க அமைச்சர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதாவது இவர்கள் வெளியேற்றப்படலாம்.

'சிறிலங்கா சுதந்திரம்' பெற்ற காலத்தில் இருந்து இற்றைவரை இவ்வளவு பெரிய அரசியல் நெருக்கடி ஒன்றை உட்கட்சிப்பூசலினால் ஆளும் கட்சிகள்எதிர்நோக்கவில்லை. ஆகையினால் தற்பொழுது தோன்றியுள்ள இந்த அரசியல் நெருக்கடியின் போக்கு எவ்வாறு இருக்கும், எவர்பக்கம் பலமான நிலை உள்ளது என்பதை நிட்டவட்டமாக அறுதியிட்டுக்கூறுதல்சிரமமான காரியமே. ஆனால், பாராளுமன்றக் கூட்டத்தொடரை தனது விசேட அதிகாரத்தினால் சிறிலங்கா ஜனாதிபதி இடைநிறுத்தியுள்ளமை சற்று பலவீனமான நிலையில் அவர் உள்ளார் என்பதையே காட்டுகின்றது. இந்நிலையில் தனது பலவீன நிலையை சீர்செய்வதற்கு இந்த இடைக்காலத்தை (அடுத்த கூட்டத் தொடர்வரையிலான காலம்) சிறிலங்கா ஜனாதிபதி பயன்படுத்தவுள்ளார் என்பது மட்டும் தெளிவு.

மூன்றாம் உலக ஜனநாயக நாடுகளில் கட்சி மாறல்கள், ஆட்சிக் கவிழ்ப்புக்கள் என்பன சாதாரண விடயமாகிலும் இந்தியா அதற்குப் பெயர் பெற்றது. ஆனால் அங்கு கட்சி மாறல்களுக்கும், ஆட்சிக்கவிழ்ப்பிற்கும் அனேகமாக பணமே பேரப் பொருளாக அமைவதுண்டு. அத்தோடு அதிகார ஆசையும் அமைகின்றது. ஆனால், சிறிலங்காவைப் பொறுத்து பணம் இந்தியாவைப்போல் முதன்மையான ஒரு பேரப் பொருளாக இல்லாமல் வர்க்க அடிப்படையும், சாதியும் அதிகார ஆசையும் பிர

# வாழைத்தோட்டத்தை எதிர்க்கும் கறுவாத்தோட்டம்

இலங்கையின் அரசியல் அதிகாரம் S.B.G கே உண்டு என்றே கூறுவார்கள் அதாவது சிங்கள, பௌத்த, கொய்கம இவற்றைச் சேர்ந்த ஒருவர் தான் அரசியல் அதிகாரத்துக்கு வருவது என்பது இயல்பு. ஆனால் '88ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் மூலம் சிங்கள பௌத்த இனத்தைச் சார்ந்தவராயிருந்தபோதும் கொய்கம சாதியைச்சாராத ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உண்மையில்இதுஒரு சந்தர்ப்ப விபத்து.

பொதுவாக கண்டி கரையோரச் சிங்கள உயர்குழாத்து உறவைக் கொண்ட ஒருவர் தான் பதவிக்கு வருவதுண்டு. இதனால் தான் டி.எஸ். சேனநாயக்க, எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்கா, சேர் யோன் கொத்தலாவல போன்றோர் கண்டியில் உள்ள உயர் குழாத்தினர் மத்தியில் திருமணம் செய்து கொண்டனர் இப்படி ஒரு மரபு இருந்ததால் பிரேமதாசாவும் இம் மரபை பின்பற்றி பண்டாரவளையில் உள்ள சாதாரண குடும்பத்தில் திருமணம் செய்துகொண்டார்.

சிங்கள உயர்குழாத்தினர் (Eletes) ஆரம்பத்திலிருந்தே பிரேமதாசா பதவிக்கு வருவதை விரும்பவில்லை. இதனால் பிரேமதாசா பெரும் தடைகளைத் தாண்டவேண்டி இருந்தது.

இதனால் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் அதிக செல்வாக்குச் செலுத்தும் மகாநிறுவனத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார். இவருக்கு முன்னுள்ள எந்த ஒரு பிரதமரோ, ஜனாதிபதியோ காட்டிய அக்கறையைவிட அதிக அக்கறை காட்டி தன்னை ஒரு தீவிர பௌத்தனாக வெளிப்படுத்திக்கொண்டார். இவர் ஜனாதிபதியானதும் எந்த ஒரு ஆட்சியாளனும் உருவாக்காத பௌத்த சாசன அமைச்சு எனும் ஓர்அமைச்சை உருவாக்கி தானே அதற்கு அமைச்சருமானார். இதன் மூலம் உயர் குழாத்தினைத் திருப்திப்படுத்தலாம் என நம்பினார்.

பிரேமதாசா பதவிக்கு வந்த காலம் ஓர் இக்கட்டான கட்டம். அச்சந்தர்ப்பமே அவரைப் பதவிக்குக் கொண்டு வந்தது ஒரு சாதாரண கட்டத்தில் பிரேமா பதவிக்கு வருவது கடினம். இலங்கையில் இந்திய இராணுவத்தின் பிரசன்னம், ஆயுதம் தாங்கிய ஜே.வி.பி யினால் தென்இலங்கையில் தீவிரகுழப்பம்,யு என். பி. எம் பிக்களும், பிரமுகர்களும் அச்சுறுத்தலுக்குள்ளாகியமை, செயலிழந்து போனமை, உயிரிழந்தமை என்பன ஜே. ஆரை அரசியல் அரங்கிலிருந்து பின் தள்ள உதவியது ஜே. ஆர் மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக வரவிரும்பினார் அதற்காக அரசியல் திட்டமாற்றங்களைச் செய்யும் பரிசீலனையில் கூட ஈடுபட்டார். இக் காலகட்டத்தில்ஜே வி.பி யின் கிளர்ச்சிகள் அதிகரிக்க யு என் பிக்குள்ளும் எதிர்ப்புகள் அதிகரித்தன. குறிப்பாக ஜே ஆர் மூன்றாவது தடவை போட்டியிடக்கூடாதென விரும்பும் பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் கொழும்பு நகரில் ஜே வி பி.யின் பேரால் வன் செயலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. தன் கட்சிக்குள்ளிருந்தே வன் செயலில் ஈடுபடுவோர் தோன்றியதால் ஜே. ஆர் தேர்தலில் போட்டியிடுவதைக்கைவிட்டார். இப்பின்னணியில் காமினியும், லலித்தும் கூட பின்வாங்க நேரிட்டது இவ்வாறான சூழலில் தான் பிரேமா ஜனாதிபதி அபேட்சகரானார்.

சு. க. உறுப்பினர் அபேட்சகர் சிறிமாவோ பண்டாரநாயகாவை எதிர்கொள்ளும் முயற்சியில், ஜே வி. பி. யின் பெயரால் பச்சைப் புலிகள் எனப்படும் குழுவினர் சு. க. வின் பிரசாரங்களைக் குழப்பினர். சு கவுக்கு அதிக வாக்கு கிடைக்கக்கூடிய இடங்களிலெல்லாம் அச்சுறுத்தலின் பேரில் வாக்களிப்புகள் நிறுத்தப்பட்டன ஜே வி. பி. யின் தேர்தல் பகிஷ்கரிப்பு இதற்கொரு தக்க சாட்டாகப் போனது. மேலும் இந்திய இராணுவத்துக்கெதிரான பலத்த எதிர்ப்பைக் காட்டியதால் மக்கள் மத்தியில் இவருக்கு ஆதரவு திரண்டது. இவ்வாறான அசாதாரண சூழல் இவருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தது.

எவ்வாறாயினும் மொத்த வாக்கில் ஏறக்குறைய 27% மான வாக்குகளை மட்டுமே பெற்று ஜனாதிபதியானார். அளிக்கப்பட்ட வாக்குகளில் ஏறக்குறைய இது 51 வீதமானாலும் மொத்த வாக்குகளில் 27 வீதம் என்பது ஏறக்குறைய 73 வீதத்தினரின் ஆதரவைப் பெறாதவர் என்பதையே இது காட்டுகிறது.

இவர் பதவிக்கு வந்ததும் எதிர்ப்புகள் பலவற்றை முறியடிக்க வேண்டியதுடன் பிரச்சினைகள் பலவற்றை தீர்க்க வேண்டியவருமானார் ஐ தே. கட்சிக்குள் ஜே. ஆரின் கையாட்களான காமினியையும், லலித்தையும் ஓரங்கட்டுவதில் தீவிர அக்கறை காட்டினார் பாராளுமன்றதேர்தலில் அதிக வாக்குகளைப்பெறும்,ஐ. தே. க. அபேட்சகரை பிரதமராக்குவதாகக் கூறிய பிரேமா அதன்படி அதிக வாக்குப் பெற்ற லலித்தையே பிரதமராக்கி இருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. இது உட்பூசலின் உச்சக்கட்டத்தை வெளிக்காட்டுகிறது. பொதுவாக பிரேமா கட்சிக்குள் ஜேஆரின் ஆதரவாளரைக் கண்டு அதிக அச்சமடைந்தார் இதனால் பதவி வேட்டையில் பலரின் தலை உருண்டது.

பிரேமா தனது அமைச்சர்கள் மீது நம்பிக்கை அற்றவராகவே காணப்பட்டார். இதனால் அமைச்சர்களை ஸ்திரப்பட விடாது அடிக்கடி அமைச்சரவையை மாற்றி வந்தார். அமைச்சர்களை ஏறக்குறைய எடுபிடிகளாகவே நடாத்தினார். அமைச்சர்களைபிரேமாவிடம் கையேந்தி நிற்க வேண்டியவர்களாகவும் சுயமாகத் தீர்மானம் எடுக்க முடியாதவர்களாகவும் ஆக்கினார். பொதுவில் அமைச்சர்கள் பிரேமாவின் கட்டுப்பாட்டுக்கு பெரிதும் உட்படுத்தப் பட்டார்கள்.

ஜே. வி. பி.யினரைபிரேமா அடக்கியமை. இந்திய இராணுவத்தை வெளியேற்றியமை என்பதுடன் தென் இலங்கையின்நெருக்கடிபெரிதும் அடங்கிவிட்டது எனலாம். இந்திய இராணுவம் தோல்வி தழுவிய நிலையில் இலங்கையிலிருந்து வெளியேறிய படியால் தற்போது இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாக தலையிடும் என்ற அச்சம் தென் இலங்கை அரசியல் வாதிகளிடம் இல்லை. மேலும் ஜே. வி. பி. யின் தலைமைப் பீடம் உட்பட அதன் ஒரு தலைமுறையே அழிக்கப்பட்டுவிட்டதால் ஜே. வி. பி. பற்றிய அச்சமும் இவர்களுக்கு இல்லை. இத்தகைய அச்சமின்மை சிங்கள உயர்குழாத்திடம் காணப்பட்டமையால் பிரேமதாசாவை பதவியிலிருந்து கவிழ்க்க உயர்குழாத்தினர் முயற்சி செய்கின்றனர்.

உண்மையில் சிங்கள உயர் குழாத்தினர் '88, '89, '90, ஆம் ஆண்டு அரசியல் சூழலில் அடங்கியிருந்தனரே தவிர அவர்கள் தோற்றுப் போய் விடவில்லை இவர்கள் பிரேமா போன்ற ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த, கொய்கம உயர்சாதி அல்லாத ஒருவர் பதவிக்கு வருவதை விரும்பவில்லை. நெருக்கடியான சூழலில் பிரேமா பதவிக்கு வந்ததை தவிர்க்க முடியாதிருந்த போதும் தற்போது உயர் குழாத்துக்கான அச்சுறுத்தல் குறைந்திருக்கும். இச் சூழலில் அது பிரேமாவைக் கவிழ்த்து பதவிக்கு வர முயற்சிக்கின்றது. ஜே. ஆர், காமினி, லலித் போன்றோர் இவ் அரங்கத்தில் முக்கிய நடிகர்களாவர் இவர்களுக்குப் பின்னால் உயர் குழாத்தைச் சேர்ந்த ஒரு வர்க்கமே நிற்கிறது. அது சிங்கள,பௌத்த, கொய்கம உயர்குழாத்தினரே.

